ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2444/26 - 2025 ජූලි මස 09 වැනි බදාදා - 2025.07.09

2444/26 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DIVPG/LND/LA/AQURE/6/13.
காணி அமைச்சின் குறிப்பு இல.:
4-3/7/2020/HW/205.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பொல்கஹவெல பிரதேச செயலாளர் பிரிவில், அஹுகொட மேற்கு (881) கிராம அலுவலர் பிரிவிற் குட்பட்ட பின்வரும் பெயர்கள் மற்றும் விஸ்தீரணங் களைக் கொண்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 421705, மண்டல இல. 01, தாள் இல. (1) மற்றும் 2025.05.09 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. துண்டு இல. 1
காணியின் பெயர்: - ; உரிமை கோருபவர்: M. H. M. சமிந்த பண்டார மற்றும் உடவத்த, அஹுகொட, பொதுஹெர; விஸ்தீரணம்: 0.0228 ஹெக்டயார்.

2. துண்டு இல. 2
காணியின் பெயர்: உடவத்தஹேன; உரிமை கோருபவர்: A.M. ஞானவதி, அஹுகொட, பொது ஹெர; விஸ்தீரணம்: 0.0073 ஹெக்டயார்.

3. துண்டு இல. 3
காணியின் பெயர்: உடவத்தஹேன; உரிமை கோருபவர்: A.M. திலகரத்ன பண்டா, அஹுகொட, பொதுஹெர; விஸ்தீரணம்: 0.0065 ஹெக்டயார்.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பொல்கஹவெல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

R.M.S.N. ராஜபக்ஷ,
பிரதேச செயலாளர்,
பொல்கஹவெல.

பிரதேச செயலகம்,
பொல்கஹவெல,
2025, யூலை 07.

EOG 07 - 0091

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.